# ராஜ்ய மொழி வாச



79
1-57

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
5 - JAN 1957
MADRAS

2

TB
031(2)
N7
86868

சந்தர் & கம்பெனி,
520, திருவல்லிக்கேணி ஹைரோடு, சென்னை-5.

# இராஜ்ய மொழி வாசகம்

## இரண்டாம் புத்தகம்

இரண்டாம் வகுப்புக்கு

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1-57
5 - JAN 1957
MADRAS

ஆசிரியர்

**L. மரியப்பிரகாசம், B.A., L.T.,**

ஸாந்தோம் ஹைஸ்கூல், சென்னை.

**ராஜா ராம்சந்தர் & கம்பெனி,**

**520, திருவல்லிக்கேணி ஹைரோடு, சென்னை-5.**

முதற் பதிப்பு 1956

86868

பதிப்புரிமை

TB
031(N)
N56

விலை அணா 5

ராஜா ராம்சந்தர் பிரஸ், நெ. 4. நல்லதம்பி முதலி தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை-5.

# முகவுரை

இப்புத்தகத்தில் இவ்வகுப்பிற்குரியபடி சம்பாஷணைக்கு வேண்டிய விஷயங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. பிள்ளைகள் தம்மைப் பற்றியும் தம்மைச் சூழ்ந்துள்ளவற்றைப் பற்றியும் திட்டமான அறிவு பெறவும், அவ்வறிவுக்கேற்ற சொற்களைக் கையாளவும், அவற்றைப்பற்றித் திருத்தமாகப் பேசவும் வேண்டியபடி பயிற்சிகளும், படப்படிப்புப் பாடங்களும், இதனில் அமைந்துள்ளன. ஒரு திட்டமான நிகழ்ச்சி அல்லது விஷயம், இதனைப் பற்றி ஒழுங்கான முறையில் முதலும், முடிவும் அமைத்துச் சிறிய கட்டுரைகளைப் பிள்ளைகள் தாமாகவே அமைத்தற்குரிய முறையில் பல பாடங்கள் காட்டப்பட்டுள்ளன. கேள்விகள், பிள்ளைகளின் உற்றறியும் ஆற்றலையும் கற்பனு சக்தியையும், ஊக்கும்படி அமைக்கப்பட்டுள்ளன. விளையாட்டுப்பாடல்கள், கதைகள், நாடகங்கள் இவற்றிலும் பிள்ளைகள் பயிற்சி பெருமாறு பாடங்களும், முறைகளும் வகுக்கப்பட்டுள்ளன. சொற்களின் உச்சரிப்பு, அவற்றைக் கையாளும் முறை முதலியவற்றை இவ்வகுப்பில் ஆசிரியர்கள் சிறந்த முறையில் பிள்ளைகளுக்குப் பயிற்றுவிக்கப் பயிற்சிகள் கொடுக்கப்பட்டுள்ளன. மௌனமாகப் படித்தல், உரக்கப் படித்தல் இவ்விரண்டையும் போதிய அளவு வகுப்பில் செய்து காட்ட இதனிலுள்ள பாடங்கள் மிகவும் உதவியாய் இருக்கும்.

**ஆசிரியர்.**

# பொருளடக்கம்


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | என் வரலாறு | ... | 7 |
| 2. | படப்படிப்பு—ஊர்ப்பகுதிகள் | ... | 8 |
| 3. | படப் படிப்பு-தொழிலாளிகள் | ... | 10 |
| 4. | சம்பாஷணைப் பாடம்-கருவிகள் | ... | 12 |
| 5. | மௌனப் படிப்பு-படி-செய் | ... | 13 |
| 6. | மௌனப் படிப்பு-படி-விடை எழுது | ... | 14 |
| 7. | மௌனப் படிப்பு | ... | 15 |
| 8. | பாப்பா பாட்டு—பாடல் | ... | 16 |
| 9. | நரியும் திராட்சையும்-பாடல் | ... | 17 |
| 10. | சிங்கமும் சுண்டெலியும்-பாடல் | ... | 19 |
| 11. | கிழமைகள் | ... | 20 |
| 12. | பசு | ... | 22 |
| 13. | மௌனப் படிப்பு | ... | 24 |
| 14. | உச்சரிப்பு | ... | 25 |
| 15. | வாழை மரம் | ... | 26 |
| 16. | அறு சுவைகள் | ... | 28 |
| 17. | மனிதர் | ... | 30 |
| 18. | சொல் இணைப்பு | ... | 34 |
| 19. | வீடு | ... | 35 |
| 20. | குதிரை | ... | 37 |
| 21. | ஒரு பொருட் சொற்கள் | ... | 40 |
| 22. | நான்கு திசைகள் | ... | 41 |
| 23. | சூரியன் | ... | 44 |
| 24. | எதிரொலி | ... | 47 |
| 25. | பறவைகள் | ... | 51 |
| 26. | கிளிக்கண்ணி-பாடல் | ... | 54 |
| 27. | நரியும் வெள்ளாடும் | ... | 56 |
| 28. | எதிரிடைச் சொற்கள் | ... | 60 |
| 29. | ஓநாயும் ஆட்டுக்குட்டியும்-நாடகம் | ... | 61 |
| 30. | பாடகனும் நரியும்-மௌனப்படிப்பு | ... | 63 |
| 31. | நம் உடம்பு | ... | 67 |
| | உலக நீதி-செய்யுள் | ... | 70 |

## பாட திட்டம்

### இரண்டாம் வகுப்பு

**I. வாய்மொழி வேலை:**—(1) முதல் வகுப்பில் நடைபெறுவதற்கெனக் குறித்தவை போன்ற பொருள்களைப்பற்றி உரையாடுதலைத் தொடர்ந்து நடத்தலோடு, பிள்ளைகள் மேலும் பல சொற்களை எடுத்தாள வாய்ப்பும் உண்டாக்குதல். ஒரு சிறு நிகழ்ச்சியை முதலும் முடிவும் தெளிவாய்த் தோன்றுமாறு தம் மனத்தில் அமைத்து, அதை எடுத்துச் சொல்லவும் பிள்ளைகளைப் பழக்குதல்.

(2) சிறு நாடகங்களையும், உரையாடல்களையும் நடத்திக் காட்டுதல்.

(3) பாலர் பாட்டுகளும், அபிநயப் பாட்டுகளும் மேலும் பல பாடக் கற்றல்.

**II. வாசிப்பு:**— (1) பாட புத்தகத்தையும், சொல்லட்டை, வாக்கிய அட்டைகளையும் பார்த்துப் படித்தல். 400 புதுச் சொற்களைக் கற்றல்.

(2) **மௌன வாசிப்பு:**—மௌன வாசிப்புக்கும் உரத்த வாசிப்புக்கும் தகவுப் பொருத்தம் 40/60 ஆக இருக்கவேண்டும்.

இதில் அடங்குபவை:—(i) மின்னட்டைகளில் எழுதியுள்ள கட்டளைகளும், கற்பனைகளும். பிற பாடங்கள், கைவேலைகள், பள்ளியிற் செய்து முடிக்க மாணவர் தாமே குறித்து மேற்கொண்ட காரியங்கள் (projects) என்பனவற்றைப்பற்றிய உத்தரவுகளைப் படித்து அவற்றிற்கேற்ப நடத்தல். (ii) மேலே I (2)-ம் பிரிவினையிற் கண்ட நாடகங்களையும், சம்பாஷணைகளையும் நடிக்கப் பழகுமுன், மௌனமாய் வாசித்தல்.

**III. எழுதுதல்:**—எழுதுகோலைச் சரியான முறையிற் பிடிக்கவும், தெளிவாயும் விரைவாயும் எழுதவும் கற்பதை வற்புறுத்தல், படித்த பாடங்களிற் கேட்கும் வினாக்களுக்கு ஒவ்வொரு வாக்கியத்தில் விடை எழுதும் திறமையை வளர்த்தல்.

உபகரணம்:—முதல் வகுப்பிற்கு உள்ளபடி.

# இரண்டாம் புத்தகம்

## இரண்டாம் வகுப்பு

## 1. என் வரலாறு

என் பெயர்..........................................

என் வயது..........................................

என் தகப்பனார் பெயர்..............................

என் தாயார் பெயர்..................................

என் வீட்டு எண்....................................

தெருவின் பெயர்....................................

ஊரின் பெயர்........................................

தாலூகா..............................................

ஜில்லா................................................

என் பள்ளியின் பெயர்..............................

என் வகுப்பு........................................

என் ஆசிரியர் பெயர்................................

**பயிற்சி**

**உன் வீட்டில் உள்ளவர்களின் பெயர்களை எழுது.**

**உன் வகுப்புப் பிள்ளைகளின் பெயர்களை எழுது.**

# 2. படப்படிப்பு



ஊர்ப் பகுதிகள்

[குறிப்பு:—கேள்விகளை ஆசிரியர் கேட்க மாணவர்கள் விடை கூறலாம்.]

1. இது எதன் படம் ?
2. இதில் எத்தனைத் தெருக்கள் இருக்கின்றன ?
3. மலை எங்கே இருக்கிறது ?
4. குளம் எங்கே இருக்கிறது ?
5. அதைச் சுற்றிலும் படிகள் ஏன் இருக்கின்றன ?
6. மாடுகள் எங்கே மேய்கின்றன ?
7. யானை எங்கிருந்து புறப்படுகிறது ?

1. பின் வரும் சொற்களை உரக்கப் படிக்க.

| | | | | |
|---|---|---|---|---|
| மலை | குலம் | விதி | விடு | தெரு |
| மழை | குளம் | வீதி | வீடு | தேர் |

2. பின் வருபவைகளை மௌனமாகப் படித்து எழுது.

கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்.

ஆறு இல்லா ஊருக்கு அழகு இல்லை.

ஊருடன் கூடி வாழ்.

# 3. படப் படிப்பு

## தொழிலாளிகள்

[குறிப்பு :—கேள்விகளை ஆசிரியர் கேட்க, மாணவர்கள் விடை கூறுவது போதும்.]



### 1

1. இப்பாடத்தில் நீ யாரைப் பார்க்கிறாய்?
2. உழவன் என்ன செய்கிறான் ?
3. அவன் எதனால் உழுகிறான் ?
4. அவன் வலக்கையில் இருப்பது என்ன ?
5. இடக்கையில் அவன் எதைப் பிடித்திருக்கிறான் ?
6. மாடுகள் எங்கே கட்டப்பட்டிருக்கின்றன ?
7. அவை காளைகளா ? பசுக்களா ?
8. உழுத இடங்களை எப்படி அறியலாம் ?
9. ஊர் எங்கே இருக்கிறது ?
10. என்ன என்ன மரங்களை நீ காண்கிறாய்?



## 2

1. இங்கே எத்தனை பேர்கள் வேலை செய்கிறார்கள் ?
2. நிற்கிறவர் என்ன செய்கிறார் ?
3. அவர் கையில் இருப்பது என்ன ?
4. மரத்தை இழைப்பது ஏன் ?
5. உட்கார்ந்திருப்பவர் என்ன செய்கிறார்?
6. அவர் இடக்கையில் வைத்திருப்பது யாது ?
7. அவர் வலக்கையில் வைத்திருப்பது யாது ?
8. உளி எதனால் செய்யப்பட்டது ?
9. மரத்தைச் செதுக்குவது ஏன் ?
10. உன் அறையில் உள்ள மரச்சாமான்கள் யாவை ?

# 4. சம்பாஷணைப் பாடம்




## கருவிகள்

1. இச் சொற்களைப் படி. படங்களைக் காட்டு.

**அரம் படி குறடு கடப்பாரை**
**தராசு கத்தி கோடரி அரிவாள்**
**உளி இடுக்கி கத்தி மண்வெட்டி**

2. படங்களிலுள்ள கருவிகளின் பெயர்களை அகர வரிசையாய்ச் சொல்.
3. ஒவ்வொன்றும் எதனால் செய்யப்பட்டிருக்கிறது ?
4. ஒவ்வொன்றையும் உபயோகப்படுத்துபவர் யார் யார் ?
5. ஒவ்வொன்றையும் உபயோகிப்பது போல் நடித்துக் காட்டு,

# 5. மௌனப் படிப்பு

## படி-செய்

[குறிப்பு :—ஆசிரியர் எண்களைப் படிக்க, மாண வர்கள் கட்டளையைப் படித்து அதன்படி செய்ய வேண்டும்.]

1. எழுந்திருங்கள்.
2. நிமிர்ந்து நில்லுங்கள்.
3. உங்கள் பெயர்களைச் சொல்லுங்கள்.
4. கடவுளைத் துதியுங்கள்.
5. உட்காருங்கள்.
6. வாசக பாடத்தை எடுங்கள்.
7. என்ன பாடம் படிக்கிறீர்கள் ?
8. பாடத்தைப் படியுங்கள்.
9. படித்த பாடத்தை எழுதுங்கள்.
10. புத்தகத்தை மூடுங்கள்.
11. புத்தகங்களை ஒழுங்காக அடுக்குங்கள்.
12. புத்தகங்களை எடுத்துக்கொள்ளுங்கள்.
13. வலப்புறம் திரும்புங்கள்.
14. தோட்ட வேலைக்குச் செல்லுங்கள்.

# 6. மௌனப் படிப்பு

## படி-விடை எழுது

உன் பெயர் என்ன ?

உன் தகப்பனுர் பெயர் என்ன ?

அவர் தொழில் யாது ?

உன் வீடு எந்தத் தெருவில் இருக்கிறது ?

உன் வயது என்ன ?

உனக்குச் சகோதரர்கள் எவ்வளவு பேர் ?

நீ எந்த வகுப்பில் படிக்கிருய் ?

அதில் எத்தனை பிள்ளைகள் படிக்கின்றனர் ?

உன் புத்தகத்தின் ஆசிரியர் யார் ?

அதன் விலை என்ன ?

காலையில் எப்பொழுது பள்ளிக்கூடம் போகிருய் ?

மாலையில் எப்பொழுது பள்ளிக்கூடத்திலிருந்து திரும்புகிருய் ?

# 7. மௌனப் படிப்பு













| | | | |
|---|---|---|---|
| பகல் | இரவு | எந்த | நேரம் |
| ஆண் | இழு | நிறுத்த | அகாரணம் |
| உபயோகி | அபராதம் | அசுத்தம் | வியாதி |

# 8. பாப்பா பாட்டு



1. ஓடி விளையாடு பாப்பா—நீ
   ஓய்ந்திருக்க லாகாது பாப்பா!
   கூடி விளையாடு பாப்பா—ஒரு
   குழந்தையை வையாதே பாப்பா!

2. காலை எழுந்தவுடன் படிப்பு—பின்பு
   கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
   மாலை முழுதும் விளையாட்டு—என்று
   வழக்கப் படுத்திக்கொள்ளு பாப்பா!

—வரகவி சுப்பிரமணிய பாரதியார்.





# 9. நரியும் திராட்சையும்

ஒரு நாள் சிறுநரி
ஒன்று—ஊர்
ஓரச்சாலையெல்லாம்
ஓடியே சென்று
இரையொன்றும் காணாமல்
தேடி—மனம்
ஏங்கியே என் செய்வோம்
என்று தள்ளாடி
காட்டுப்
புறமெல்லாம்
ஓடி—மெத்தக்



கவலையுடன் அங்கு
வந்து பின்னுடி
வழியிலோர் தோட்டத்தில்
நீண்டு—தொங்கும்
வரிசையில் திராட்சைக்
குலைகளைக் கண்டு
எட்டின மட்டும்
குதித்துப்—பார்த்து
எட்டாது போகவே
இலேசாய் மதித்து
சீச்சீப் பழம் இது
தேனே—இதைத்
தின்ருல் புளிக்கும்
இது நமக் கேனே
என் றந்த நரியுமே
அன்று—அதை
ஏசியே சென்றது
அவ்விடம் நின்று.

# 10. சிங்கமும் சுண்டெலியும்



1. காட்டில் சிங்கம் தூங்கையிலே
சுண்டெலி அதன்மேல் விளையாட
சிங்கம் அதிகக் கோபங்கொண்டு
எலியைக் கொல்லப் பார்த்ததுவே

2. ஏழைச் சுண்டெலி கும்பிட்டு
இரக்கமாய் மன்னிப்புக் கேட்டிடவே
சிங்கம் அதன்படி விடைகொடுத்து
சீச்சீ......ஓடு என்றதுவே.

3. ஒருநாள் சிங்கம் வலைதனிலே
அகப்பட எலிவந்து வலைதன்னை
அறுத்துச் சிங்கத்தை வெளிபடுத்த
சிங்கம் மகிழ்ந்து கொண்டதுவே.

# 11. கிழமைகள்




இன்று புதன்கிழமை.
நேற்று செவ்வாய்க்கிழமை.
நேற்றைக்கு முதல் நாள் திங்கட்கிழமை.
அதற்கு முதல் நாள் ஞாயிற்றுக்கிழமை.
நாளைய தினம் வியாழக்கிழமை.
நாளைக்கு மறுநாள் வெள்ளிக்கிழமை.
வெள்ளிக்கு அடுத்த நாள் சனிக்கிழமை.
இந்த ஏழு நாட்களும் சேர்ந்தது ஒரு வாரம் ஆகும்.

**ஞாயிற்றுக்கிழமை திங்கட்கிழமை**
**செவ்வாய்க்கிழமை புதன்கிழமை**
**வியாழக்கிழமை வெள்ளிக்கிழமை**
**சனிக்கிழமை இன்று நேற்று நாள்**
**நாளை மறு அடுத்த இந்த ஏழு**
**நாட்கள் சேர்ந்தது வாரம்**

### கேள்விகள்

1. இன்று என்ன கிழமை ?
2. நேற்று என்ன கிழமை ?
3. நாளைக்கு என்ன கிழமை ?
4. ஒரு வாரத்திற்கு எவ்வளவு நாட்கள் உண்டு ?

### பயிற்சி

**வாக்கியங்களை முடித்துக் காட்டு. ஏற்ற ஒன்றைப் பொறுக்கிக்கொள் :**

1. வாரத்தில் கடைசி நாள் ——.
(ஞாயிறு, சனி, புதன்)

2. வாரத்திற்கு நாட்கள் ——.
(ஏழு, எட்டு, ஆறு)

3. செவ்வாய்க்கு முதல் நாள் ——.
(புதன், வியாழன், திங்கள்)

4. வியாழனுக்கு அடுத்த நாள் ——.
(சனி, வெள்ளி, ஞாயிறு, புதன்)

# 12. பசு




பசு ஒரு சாதுவான மிருகம்.
பசுவுக்குக் கால்கள் நான்கு.
அதற்குக் கொம்புகள் இரண்டு.
பசு புல் மேயும்.
பசுவின் பாலைக் கறக்கலாம்.
பால் வெள்ளை நிறம்.
பாலைக் காய்ச்சிக் குடிக்கலாம்.
பால் சுவையாய் இருக்கும்.
பால் உடம்புக்கு நல்லது.

**சாது மிருகம் கொம்பு புல் மேயும்**
**கறக்கலாம் வெள்ளை நிறம் காய்ச்சு**

## கேள்விகள்

1. பசுவுக்குக் கால்கள் எவ்வளவு ?
2. பசுவுக்குக் கொம்புகள் எவ்வளவு ?
3. பசு என்ன தின்னும் ?
4. பால் என்ன நிறம் ?

**கோடு போட்ட இடங்களை நிரப்பு :**

1. பசு —— ஒரு மிருகம்.
2. பசு —— மேயும்.
3. பாலைக் —— க் குடிக்கலாம்.
4. பால் —— நல்லது.

## தெரிந்து கொள்

| ஒரு பொருளைக் குறிக்கும் | | ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்களைக் குறிக்கும் |
|---|---|---|
| எறும்பு | ----- | எறும்புகள் |
| முட்டை | —— | முட்டைகள் |
| எருது | —— | எருதுகள் |
| ஈ | —— | ஈக்கள் |
| கை | —— | கைகள் |
| பசு | —— | பசுக்கள் |
| கால் | —— | கால்கள் |
| கொம்பு | —— | கொம்புகள் |

# 13. மௌனப் படிப்பு

ஒவ்வொன்றுக்கும் எதிரிலும் 'உண்டு' அல்லது 'இல்லை' என்று பொருத்தமாக எழுது :—

1. உன் ஊரில் கோயில் உண்டா ? ( )

2. உன் ஊரில் தபால் ஆபீசு உண்டா? ( )

3. உன் ஊரில் ஆறு உண்டா ? ( )

4. நீ சைக்கிளில் ஏறியது உண்டா ? ( )

5. நீ ரயிலில் பிரயாணம் செய்தது உண்டா ? ( )

6. நீ சினிமா பார்த்தது உண்டா? ( )

7. உன் வீட்டில் கடிகாரம் உண்டா ? ( )

8. பொங்கல் பண்டிகை அன்று பள்ளிக்கூடம் உண்டா ? ( )

9. உன் பள்ளிக்கூடத்தில் மணி அடிப்பது உண்டா ? ( )

10. உன் பள்ளிக்கூடத்தில் தோட்டம் உண்டா ? ( )

# 14. உச்சரிப்பு

செம்படவன் கையில்  வலை.

எலி புகுவது  வளை.

குல்லாய் அணிவது  தலை.

காலில் இடுவது  தளை.

எறும்புப் புற்றைக்  கலை.

வயலில் பிடுங்குவது  களை.

ஒன்றில் பாதி  அரை.

கன்னத்தில் கொடுப்பது  அறை.

நான்கு சுவர் சூழ்ந்ததும்  அறை.

**இவற்றைப் படித்து எழுது. பொருள் என்ன ?**

# 15. வாழை மரம்



இது வாழை மரம்.

வாழை மரத்துக்குக் கிளைகள் இல்லை.

வாழை மரத்துக்கு இலைகள் உண்டு.

இலைகள் அகலமாய் இருக்கும்.

வாழை இலை பச்சை நிறம்.

வாழை மரம் தாறு போடும்.

அப்பொழுது பூ நீட்டிக்கொண்டிருக்கும்.

வாழைப் பூ சிவப்பு நிறம்.

வாழைக் காய்கள் சீப்பு சீப்பாய் இருக்கும்.
வாழைக் காய்களைப் பழுக்க வைக்கலாம்.
வாழைப் பழம் மஞ்சள் நிறம்.
வாழைப் பட்டைகளை எடுத்து விடு.
அதன் உள்ளே வாழைத்தண்டு இருக்கும்.
வாழைத் தண்டு வெள்ளை நிறம்.
கொல்லையில் வாழையை வளர்க்கலாம்.

**இல்லை அகலம் நாறு அப்பொழுது**
**கொண்டு சீப்பு பழுக்க மஞ்சள்**
**பட்டை அதன் தண்டு கொல்லை**
**பச்சை சிவப்பு கிளை இலை நிறம்**

### கேள்விகள்

1. வாழை மரத்துக்குக் கிளைகள் உண்டா?
2. வாழை இலை என்ன நிறம்?
3. வாழைப் பழம் என்ன நிறம்?
4. வாழைத் தண்டு என்ன நிறம்?

### பயிற்சி

பொருள்களுக்கு ஏற்ற நிறங்களைப் பொருத்திக் காட்டுக :—

| | | |
|---|---|---|
| வாழை இலை | —— | நிறம் |
| வாழைத் தண்டு | —— | நிறம் |
| வாழைப்பழம் | —— | நிறம் |
| வாழைப் பூ | —— | நிறம் |

# 16. அறு சுவைகள்

வெல்லம் இனிப்பாக இருக்கும்.

கரும்பு இனிப்பாக இருக்கும்.

பாகற்காய் கசப்பானது.

வேப்பங்காயும் கசப்பானது.

தக்காளிக்காய் புளிப்பு உள்ளது.

எலுமிச்சம் பழமும் புளிப்பு உள்ளது.

மிளகாய் வற்றல் காரமாக இருக்கும்.

மிளகும் காரமாக இருக்கும்.

கடல் நீரின் சுவை உவர்ப்பு.

வாழைப் பூ துவர்க்கும்.

பாக்கும் துவர்க்கும்.

இனிப்பு, கசப்பு, புளிப்பு, கார்ப்பு,
உவர்ப்பு, துவர்ப்பு, என்று சுவைகள்
ஆறு வகைப்படும்.

**இனிப்பு கரும்பு கசப்பு தக்காளி
வேப்பங்காய் புளிப்பு உள்ளது
எலுமிச்சை புளி வற்றல் காரம் மிளகு
உவர்ப்பு துவர்க்கும் பாக்கு கார்ப்பு
வகைப்படும்**

## கேள்விகள்

1. மிட்டாய் என்ன சுவை ?
2. பழைய மோர் என்ன சுவை ?
3. வெந்தயம் என்ன சுவை உடையது ?
4. வாழைப் பூ எப்படி இருக்கும் ?
5. மிளகின் சுவை என்ன ?

## பயிற்சி

1. **சரியாக இருந்தால் (சரி)** என்று குறி:—
   **தவருக** இருந்தால் (×) என்று குறி:—

| | | |
|---|---|---|
| (1) | சுண்டைக்காய் கசக்கும் | ( ) |
| (2) | மாதுளம் பழம் இனிக்கும். | ( ) |
| (3) | இஞ்சி காரமாய் இருக்கும். | ( ) |
| (4) | பாயசம் துவர்க்கும். | ( ) |
| (5) | உவர் மண் உப்பாக இருக்கும். | ( ) |

2. **வாக்கியங்களை முடித்துக் காட்டுக :—**

(1) வேப்பங்காய் கசப்பது போல வெந்தயமும்——.

(2) எலுமிச்சம் பழம் புளிப்பது போலப் பழைய மோரும்———.

(3) பச்சை மிளகாய் காரமாய் இருப்பதுபோல மிளகும்——.

# 17. மனிதர்

இது ஒரு பாப்பா. இதற்கு நடக்கத்



தெரியாது. இதற்குப் பேசத் தெரியாது. இதுசிரிக்கும்; அழும். குழந்தை பால் குடிக்கும்.



இவன் பாலன். இவன் நிற்கிருன். இவனுக்கு நன்ருகப் பேசத் தெரியாது. இவன் மழலை பேசுவான்.

இவர்கள் இரட்டைப் பிள்ளைகள்.



இவர்கள் ஒரே நேரத்தில் பிறந்தார்கள். இருவரும் ஒரே மாதிரியாய் இருக்கிருர்கள்.



இவன் சிறுவன்; இவள் சிறுமி. இவர்களின் உடைகளைப் பார். இருவரும் பள்ளிக்கூடம் போகிருர்கள்.



இவன் வாலிபன். இவள் மடந்தை. இவர்கள் நன்ருய்ப் படித்திருக்கிருர்கள். இவர்களுக்கு நல்ல பலம் உண்டு.



இவர்கள் கணவனும் மனைவியும். இவர்களுக்கு ஒரு குழந்தை இருக்கிறது. அவர் குழந்தையின் தகப்பனுர். இவர் குழந்தையின் தாயார்.



இவர் கிழவர். இவர் தலையெல்லாம் நரைத்து விட்டது. இவர் கையில் ஒரு தடி வைத்திருக்கிருர். இவர் தள்ளாடித் தள்ளாடி நடக்கிருர்.



இவன் நொண்டி. இவனுக்கு ஒரு கையும் ஒரு காலும் இல்லை. இவன் குச்சியை ஊன்றிக்கொண்டு நடப்பதைப் பார்.



இவன் குருடன். இவனைப் பொட்டை என்பார்கள். இவனுக்குக் கண் தெரியாது. ஒரு பையன் இவனை அழைத்துப் போகிறான்.



இவன் சித்திரக் குள்ளன். இவன் என்ன வயதானாலும் உயர மாட்டான்.

நொண்டி, குருடன், குள்ளன் இவர்கள் பிறவியில் அதிசயமானவர்கள்.

நேரம் கணவன் நொண்டி பொட்டை
நரை வாலிபன் மனைவி குருடன்
தடி பிறவி மடந்தை குள்ளன்
தள்ளாடி அதிசயம் ஒரே மாதிரி
இரட்டைப் பிள்ளை சித்திரக் குள்ளன்

ஒரு பொருட் சொற்கள்

பாப்பா, குழந்தை.
கணவன், புருஷன்.
தகப்பன், தந்தை, பிதா, அப்பா.
தாய், அன்னை, மாதா, அம்மா.
குருடன், பொட்டை.
கம்பு, குச்சி, தடி.

கேள்விகள்

1. குழந்தை என்ன குடிக்கும் ?
2. பாலன் எப்படிப் பேசுவான் ?
3. கிழவர் எப்படி நடப்பார் ?
4. குருடனை என்ன என்று கூறுவர் ?
5. பிறவியில் அதிசயமானவர்கள் யார் யார் ?
6. இரட்டைப் பிள்ளைகள் என்றால் என்ன ?
7. கிழவர் தலை எப்படி இருக்கும் ?

# 18. சொல் இணைப்பு

கீழே தடித்த எழுத்தில் பத்துச் சொற்கள் இருக்கின்றன. பின்வரும் சொற்களை அவற்றோடு தகுந்தபடி பிணைத்து எழுது.

**அம்மான்சேய் ஓசை கன்று குட்டி தங்கை**
**தம்பி பகல் பிள்ளை மணம் தகப்பன்**

அக்காள் ..........................................

அத்தான் ..........................................

அண்ணன் ..........................................

இரா (ப்) ..........................................

சிங்க (க்) ..........................................

தாய் ..........................................

தென்ன (ம்) ..........................................

பசு (ங்) ..........................................

பூ ..........................................

மணி ..........................................

# 19. வீடு



இந்தத் தெருவைப் பார். இதில் பல வீடுகள் இருக்கின்றன.

சில வீடுகள் பெரியவை; சில வீடுகள் சிறியவை. பணக்காரர்கள் பெரிய வீடுகளில் இருப்பார்கள். ஏழைகள் சிறிய வீடுகளில் இருப்பார்கள்.

சில வீடுகளுக்கு மாடிகள் உண்டு. கூரை வீடுகளை ஓடுகளால் வேய்ந்து இருக்கிறார்கள். சிலர் கூரைகளை வைக்கோலாலும் கீற்றாலும் வேய்கிறார்கள்.

வீடுகளில், ஆளோடி, திண்ணை, இடைவழி, தாழ்வாரம், கூடம், முற்றம், அறைகள், கொட்டில் முதலிய பகுதிகள் உண்டு.

பெரிய பணக்காரர் சிலர் கூரை
வேய் இடைவழி சிறிய ஏழை
பலர் கீற்று பகுதி தாழ்வாரம்

### கேள்விகள்

1. நீ எங்கே படுப்பாய் ?
2. எங்கே உண்பாய் ?
3. எங்கே படிப்பாய் ?
4. எங்கே விளையாடுவாய் ?

### பயிற்சி

**கோடு போட்ட இடங்களை நிரப்பு:—**

1. பணக்காரர்—வீடுகளில் இருப்பார்கள்.
2. தெருவில்—வீடுகள் இருக்கின்றன.
3. சிறிய வீடுகளில்—இருப்பார்கள்.
4. பல அறைகள்— இருக்கும்.

# 20. குதிரை



இந்த விலங்கைப்பார். இது குதிரை. குதிரை நமக்கு மிகவும் உதவியாயிருக்கும் மிருகங்களுள் ஒன்று. இது நம் வண்டிகளை இழுக்கும். ஜட்கா, ரேக்ளா, கோச், இவ் வண்டிகளில் குதிரையைக் கட்டுவார்கள். இதன் மேல் நாம் ஏறியும் சவாரி செய்ய லாம்.

குதிரைகள் மிக வேகமாய் ஓடும். அவற்றை ஓட்டப் பந்தயம் விடுவார்கள்.

குதிரை புல் தின்னும். கொள் தின் பதில் அதற்கு விருப்பம் அதிகம். கொள்ளை வேக வைத்து அதற்குக் கொடுப்பார்கள். குதிரைக்குக் கொள் கட்டுவதை நீ பார்த் திருக்கிறாயா ?

குதிரையின் கழுத்தில் பிடரி மயிர் இருப் பதைப் பார். குதிரைக்காரர்கள் அதை நன்றாகக் கத்தரித்து அழகாக வைப்பார்கள். குதிரையின் வால் மயிர் அடர்ந்ததாயிருக்கும். குதிரையின் குளம்புகளைப் பார். அவை பிளந்திராமல் ஒற்றையாய் இருக்கும்.

நாம் பிராணிகளிடம் அன்பாய் இருக்க வேண்டும். அவற்றிற்கு நாம் வேளையில் தீனி கொடுத்து வரவேண்டும். அப்படிச் செய்தால் அவைகளும் நம்மிடத்தில் அன்பா யிருக்கும்.

| | | | |
|---|---|---|---|
| ஜட்கா | சவாரி | ஒற்றை | விலங்கு |
| ரேக்ளா | கொள் | பிளந்து | மிருகம் |
| கோச் | பிடரி | கத்தரி | பிராணி |

## கேள்விகள்

1. நமக்கு உபயோகமாயிருக்கும் பிராணிகள் யாவை ? ஒவ்வொன்றும் நமக்கு எப்படி உபயோகமாகின்றன ?
2. **பிராணி** - இதே பொருளுள்ள வேறு சொற்கள் யாவை ?
3. குதிரை வண்டிகளிற் சிலவற்றின் பெயர்களைச் சொல்லு ?
4. குதிரை என்ன என்ன தின்னும் ?
5. பிடரி மயிர் வேறு எந்த விலங்குக்கு உண்டு ?
6. இரட்டைக் குளம்புகள் உள்ள மிருகங்கள் யாவை ?

## சொல்வதெழுது

| | | | |
|---|---|---|---|
| எரி | கொள் | ஒற்றை | குளம்பு |
| எறி | கொல் | ஒன்றை | குழம்பு |
| ஏறி | கோல் | ஒட்டை | தீனி |
| ஏரி | கோள் | ஓட்டை | திணி |

**குதிரைக்காரன்** என்பது போல் **காரன்** என்று முடியும் சொற்களில் சில எழுது.

# 21. ஒரு பொருட் சொற்கள்

கீழே இரண்டு வரிசைகளில் ஒரே பொருளுள்ள இரண்டிரண்டு சொற்கள் தரப்பட்டு இருக்கின்றன. ஆனால் அவை நேர் நேராக இல்லை; அவற்றைப் பொறுக்கி நேர் நேராக எழுதுங்கள். எழுத எத்தனை நேரம் பிடித்தது? குறியுங்கள்.

| | | |
|---|---|---|
| அருகில் | —— | ஆத்திரம் |
| அற்ப | —— | உயர்த்தி |
| ஒலி | —— | உயர |
| கீழே | —— | உறங்கு |
| கோபம் | —— | எளிய |
| தூக்கி | —— | ஓசை |
| தூங்கு | —— | கிட்ட |
| பிராணி | —— | தாழ |
| மலர் | —— | பூ |
| மேலே | —— | பொங்து |
| வளை | —— | மனை |
| விலங்கு | —— | மிருகம் |
| வீடு | —— | ஜந்து |

# 22. நான்கு திசைகள்



காலையில் எழுந்திரு. சூரியன் உதிக்கும் திசையைப் பார். அதுவே கிழக்குத் திசை. சூரியன் கிழக்கேதான் உதிக்கும். நீ இப்பொழுது கிழக்கே பார்க்கிறாய்.

உன் இரண்டு கைகளையும் நீட்டு. நீ சூரியனைப் பார்த்து நிற்கிறாய்.

இரண்டு பக்கங்களில் இரண்டு கைகளை யும் நீட்டி நிற்கிருய். இப்பொழுது உன் வலக்கைப் பக்கம் தெற்கு. இடக்கைப் புறம் வடக்கு.

மாலையில் விளையாடு. விளையாடும் பொழுது சூரியனைப் பார். சூரியன் மறை கிறது அல்லவா ? மறையும் திசை மேற்கு. சூரியன் மேற்கில் தான் மறையும்.

சூரியன் உதிக்கும் திசை கிழக்கு. சூரியன் மறையும் திசை மேற்கு. காலையில் சூரியன் கிழக்கில் இருக்கும். மாலையில் சூரியன் மேற்கில் இருக்கும்.

கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு என்று திசைகள் நான்கு.

**சூரியன் உதிக்கும் மறையும் திசை**

**கிழக்கு வடக்கு தெற்கு மேற்கு**

**இடம் வலம் புறம் மாலை**

## கேள்விகள்

1. நான்கு திசைகள் என்ன என்ன ?
2. சூரியன் எந்தத் திசையில் உதிக்கும் ?
3. சூரியன் எந்தத் திசையில் மறையும் ?
4. சூரியன் காலையில் எந்தத் திசையில் இருக்கும் ?
5. சூரியன் மாலையில் எந்தத் திசையில் இருக்கும் ?
6. நீ காலையில் சூரியனைப் பார்த்து நிற்கிறாய். உன் இடது பக்கம் என்ன திசை ? வலது பக்கம் என்ன திசை ?

## பயிற்சி

**கோடுபோட்ட இடங்களை நிரப்புக :—**

1. காலையில் சூரியன்——இருக்கும்.
2. மாலையில் சூரியன்——இருக்கும்.
3. ——கிழக்கே உதிக்கும்.
4. சூரியன் மேற்கே——.
5. சூரியனைக் காலையில் பார்த்து நின்று, கை நீட்டினால், இடது பக்கம்——. அப்பொழுது வலது பக்கம்——.
6. திசைகள் — — — — என நான்கு.

# 23. சூரியன்



சூரியனைப் பார். அவன் வானத்தில் இப்பொழுதுதான் கிளம்பிக் கொண்டிருக் கிறான்.

சூரியன் காலையில் கிழக்கே புறப்படு வான். வரவர அவன் மேலே எழும்புவான். உச்சி வேளையில் அவனை நாம் நம் தலைக்கு நேரே காணலாம். அப்பொழுது வெய்யில் அதிகமாய் இருக்கும். மாலையில் அவன் மேற்கே சாய்வான். அவன் மறைந்த பிறகு இருள் வந்து விடும்.

சூரியன் ஒளி வீசும் காலம் பகல். அவன் மறைந்த பிறகு இரவு ஆகும். இரவில் நக்ஷத்திரங்களும் சந்திரனும் தோன்றும்.

சூரியன் நமக்கு வெளிச்சத்தையும் சூட்டையும் கொடுக்கிறான். சூரியனால் தான் பிராணிகள் உயிர் வாழ்கின்றன.

இந்தப் படத்தைப் பார். சூரியன் உதயமானவுடன் உழவன் தன் மாடுகளை ஓட்டிக் கொண்டு வயலுக்குப் போகிறான். பெண்கள் குளத்திற்குச் சென்று தண்ணீர் மொண்டு வருகிறார்கள். பிறகு அவர்கள் தம் வீட்டு வேலையைச் செய்யத் தொடங்குவார்கள்.

இரவில் நாம் தூங்க வேண்டும். விடிந்தவுடன் எழுந்து நாம் வேலை செய்ய வேண்டும்.

| | | |
|---|---|---|
| நக்ஷத்திரம் | சந்திரன் | இரவு |
| வானம் | பிராணி | ஒளி |

### கேள்விகள்

1. சூரியன் எப்பொழுது உதிக்கிறான் ?
2. அவன் எங்கே உதிக்கிறான் ?
3. அவன் எப்பொழுது மறைகிறான் ?
4. அவன் எங்கே மறைகிறான் ?
5. சூரியனால் நமக்குக் கிடைப்பன யாவை ?
6. படத்தில் உழவன் எதைச் சுமக்கிறான் ?
7. பெண்கள் கையில் இருப்பது என்ன ?

### எதிரிடைச் சொற்கள்

காலை — மாலை; பகல்—இரவு;

தண்ணீர் — வெந்நீர்; நேர்—கோணல்;

உதி — மறை; மேலே—கீழே;

### சொல்வதெழுது

| | | |
|---|---|---|
| குளம் | வேளை | ஒளி |
| குலம் | வேலை | ஒலி |
| குள்ளம் | வாழை | ஒழி |

# 24. எதிரொலி



முருகன் ஒரு நாள் தன் ஊருக்கு அப்பால் இருந்த குன்றுகளின் அருகிற் சென்றான்.

அவன் அங்கே விளையாட்டுக்காக "ஹோ !" என்று கூவினான்.

'ஹோ' என்று குன்றுகளிலிருந்து ஒரு குரல் எழும்பியது.

"யார் அது ?" என்று முருகன் கேட்டான்.

"யார் அது?" என்று உடனே பதில் வந்தது. முருகனுக்குக் கோபம் வந்தது. "யாரடா முட்டாள் நீ?" என்று முருகன் உரக்கக் கேட்டான். "யாரடா முட்டாள் நீ" என்ற விடையே உண்டாயிற்று.

முருகனுக்குத் தன் கோபத்தை அடக்க முடியவில்லை. குன்றுகளில் யாரோ கெட்ட பையன் ஒருவன் ஒளிந்திருக்கிறான் என்று அவன் எண்ணினான். அவனை முருகன் உரக்கத் திட்டத் தொடங்கினான். அத் திட்டல் களே திரும்பி வந்தன. முருகனுக்கு மிகுந்த வருத்தம் உண்டாயிற்று. வெய்யில் அதிக மாகி விட்டபடியால் அவன் வீட்டுக்குத் திரும்பி விட்டான்.

வீட்டில் அவன் தன் தகப்பனா ரிடம் நடந்தவற்றைச் சொன்னான். அந்தக் கெட்ட பையனை பிடித்துத் தரும்படி அவன் அவரைக் கேட்டான்.

அவர், "என் அருமை மகனே! நீ பேசின பேச்சுக்களே குன்றுகளிலிருந்து எதிரொலியாக வந்தன. அங்கே ஒருவரும் இல்லை. நீ கெட்ட சொற்களைச் சொன்னாய். எதிரொலி அவற்றையே உனக்குத் திருப்பிக் கொடுத்தது. நீ நல்ல பேச்சைப் பேசு; உனக்கும் நல்ல விடை கிடைக்கும். நீ நல்லவனாயிரு; பிறரும் உன்னிடம் நல்லவராய் இருப்பார்கள்" என்றார்.

மறுநாள் காலையில் முருகன் குன்றுகளின் அருகில் சென்றான். அவன் நல்ல சொற்களைப் பேசினான். குன்றுகளிலிருந்தும் நல்ல பேச்சுக்களே வெளி வந்தன. முருகன் மகிழ்ச்சியுடன் வீட்டுக்கு வந்தான்.

**அப்பால் பதில் திட்ட குன்று**

**அருகு விடை திட்டல் எதிரொலி**

### கேள்விகள்

1. குன்றுகள் எங்கே இருந்தன ?
2. முருகனுக்குப் பதில் எங்கேயிருந்து வந்தது ?
3. முருகனுக்கு ஏன் கோபம் வந்தது ?
4. அவன் தகப்பனரிடம் என்ன கேட்டான் ?
5. அவர் முருகனிடம் என்ன கூறினர் ?
6. மறுநாள் முருகன் செய்தது என்ன ?

2. பின்வரும் சொற்களைத் தகுந்தபடி ஒவ்வொரு வாக்கியத்திலும் அமை.

**அப்பால் விளையாட்டுக்காக நடந்தவற்றை**

**பேசு திட்டினன்**

1. முருகன்—கூவினன்.
2. ஊருக்கு—குன்றுகள் இருந்தன.
3. முருகன் தன் தகப்பனரிடம்—கூறினன்.
4. நீ நல்ல பேச்சை—.
5. அவன் உறக்கத்—.

TB
631(2)
N56
86868

# 25. பறவைகள்

## காகம்

நாம் காகங்களைத் தினந்தோறும் பார்க்கிறோம். அவை கூட்டங் கூட்டமாகப் பறக்கின்றன. விடியுமுன் அவை கத்தி நம்மை எழுப்புகின்றன. சிலர் காகங்களுக்குச் சோறு போட்ட பின்பே தாம் உண்பார்கள். காகத்தை ஒருவரும் பிடித்து வளர்ப்பதில்லை.



## கோழி

கோழிகளை வீடுகளில் வளர்க்கலாம். அவை சாதுவான பறவைகள். அவை காலையில் கூவும். ஆண் கோழிக்குச் சேவல் என்பது பெயர். பெண் கோழிக்குப் பெட்டை என்பது பெயர். பெட்டைக் கோழி முட்டை இடும். முட்டைகளிலிருந்து குஞ்சுகள் வெளிவரும்.



## கிளி

கிளி மிக அழகான பறவை. சிலர் கிளிகளைப் பிடித்துப் பழக்குகிறார்கள். கிளிகளைப் பேசப் பழக்கலாம். ஆனால் அது சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்லும். கிளிகளில் பல நிறங்களுண்டு. நம் நாட்டில் பச்சைக் கிளிகளே அதிகம்.



## மயில்

மயில் ஒரு காட்டுப் பறவை. மயிலுக்கு நீண்ட தோகை உண்டு. சில சமயங்களில் மயில் தன் தோகையை விரித்து ஆடும். அதைப் பார்க்க அழகாய் இருக்கும்.



| | | |
|---|---|---|
| **தினந்தோறும்** | **முட்டை** | **அழகாய்** |
| **விடியுமுன்** | **பழக்கு** | **தோகை** |
| **விரித்து** | **குஞ்சு** | **ஆடும்** |

## கேள்விகள்

1. இந்தப் பாடத்தில் காணப்படும் பறவைகள் யாவை?
2. உன் ஊரில் பறக்கும் பறவைகள் யாவை?
3. கோழி எப்பொழுது கூவும்?

## பயிற்சி

**கோடு போட்ட இடங்களில் தகுந்த வார்த்தைகளை நிரப்புக :—**

1. காகம்——நிறம் உடையது. (கருப்பு, வெள்ளை, சிகப்பு.)
2. ஆண் கோழிக்கு——என்று பெயர். (பெட்டை, சேவல், முட்டை.)
3. கிளியின் நிறம்——(நீலம், மஞ்சள், பச்சை.)
4. மயில் தோகையை விரித்து——(ஆடும், பாடும், குதிக்கும்.)

# 26. கிளிக்கண்ணி



அன்பை வளர்க்க வேண்டும் ;
செல்லக் கிளியே !
அறிவைப் பெருக்க வேண்டும் ;
செல்லக் கிளியே !
அன்னை சொற் கேட்க வேண்டும் ;
செல்லக் கிளியே !
அப்பாவைப் பணிய வேண்டும் ;
செல்லக் கிளியே !
உன்னைப் பெற்று வளர்த்தார் ;
செல்லக் கிளியே !

உயிர் போல் உன்னை நேசித்தார்;

செல்லக் கிளியே !

பெற்றவர் மனங்குளிரச்

செல்லக் கிளியே !

பேரறிஞன் ஆகவேண்டும் ;

செல்லக் கிளியே !

| | | |
|---|---|---|
| **அன்பு** | **பணிய** | **மனங்குளிர** |
| **அறிவு** | **பெற்று** | **பேரறிஞன்** |
| **அறிஞன்** | **பெருக்க** | **செல்லம்** |

**கேள்விகள்**

1. எதை வளர்க்க வேண்டும் ?
2. எதைப் பெருக்க வேண்டும் ?
3. யார் சொற் கேட்க வேண்டும் ?
4. யாரைப் பணிய வேண்டும் ?

# 27. நரியும் வெள்ளாடும்



ஓரூரில் கோடையில் ஒரு நாள் வெய்யில் கடுமையாய் இருந்தது. அப்பொழுது ஆறுகள், ஓடைகள், குளங்கள் இவை யெல்லாம் நீரில்லாமல் வறண்டு கிடந்தன. ஒரு நரி தாகத்தால் தவித்துத் தண்ணீருக்காக எங்கும் அலைந்தது. அதற்கு ஒரு சொட்டுக் கூடத் தண்ணீர் கிடைக்கவில்லை.

கடைசியாக ஒரு தோட்டத்தில் ஒரு கிணற்றை அது கண்டது. ஆவலுடன் அதனண்டையில் அது ஓடிப் பார்த்தது. கரையிலிருந்து அதனுல் தண்ணீரை எட்ட முடியவில்லை. அது குனிந்து குனிந்து பல முறையும் முயன்று பார்த்தது. அப்படிச் செய்யும்போது அது கால் வழுக்கிக் கிணற்றுக்குள் விழுந்துவிட்டது.

நல்ல வேளையாய்க் கிணற்றில் தண்ணீர் ஆழமாயில்லை. நரி வேண்டியமட்டும் தண்ணீரைக் குடித்தது. ஆனுல் அதனுல் கரையின் மேல் ஏற முடியவில்லை.

அதிக நேரம் கழித்து அங்கு ஒரு ஆடு வந்தது. அது கிணற்றுள் எட்டிப் பார்த்தது. நரியைப் பார்த்து, "தண்ணீர் நன்றுய் இருக்கிறதா ?" என்று கேட்டது.

நரி தந்திரமாய், "தம்பி, இந்தத் தண்ணீரைப் போல் இனிமையானது வேறு எங்கும் கிடையாது. இதன் இனிப்பு கற்கண்டை விட அதிகமானது. வந்து பார்," என்றது.

மூட ஆடு, எண்ணமில்லாமல் கிணற்றுக்குள் குதித்துத் தண்ணீரைக் குடித்தது. நரி, சரேரென்று ஆட்டின் கொம்புகளின் மேல் ஏறிக் கரையை எட்டிப் பிடித்து மேலே வந்துவிட்டது. ஆடு தன் மூடத்தனத்தைக் குறித்து எண்ணி வருந்திற்று.

| | | |
|---|---|---|
| **கோடை** | **வறண்டு** | **பலமுறை** |
| **வழுக்கி** | **ஓடை** | **சொட்டு** |
| **ஆவல்** | **முயன்று** | **ஆழம்** |
| **தந்திரம்** | **கற்கண்டு** | **மூடத்தனம்** |

### கேள்விகள்

1. எந்தக் காலத்தில் வெய்யில் அதிகம் ?
2. உன் ஊரிலுள்ள நீர் நிலைகள் யாவை ?
3. நரி தண்ணீரை எங்கே கண்டது ?
4. நரி ஏன் கிணற்றில் விழுந்தது ?
5. ஆடு என்ன கேட்டது ?
6. நரி அதற்கு என்ன விடை கூறிற்று ?
7. நரி எப்படி கரை ஏறியது ?

### சொல்வதெழுது

**தண்ணீர் கிணற்றில் இருந்தது.**

**நரி கிணற்றுக்குள் விழுந்தது.**

**அது தந்திரமாய் வெளியேறிற்று.**

**கீழ்க்காணும் வாக்கியங்களை தகுந்தபடி இணைத்து எழுதுக :—**

| | |
|---|---|
| 1. கோடையில் | கிணற்றுக்குள் குதித்துத் தண்ணீரை குடித்தது. |
| 2. குளங்கள் | தாகத்தால் தவித்தது. |
| 3. நரி | வெய்யில் கடுமையாய் இருக்கும். |
| 4. ஆடு | நீரில்லாமல் வறண்டு கிடந்தன. |

## 28. எதிரிடைச் சொற்கள்

கீழே கொடுக்கப்பட்டிருக்கும் எதிரிடைச் சொற்களைக் கோடிட்ட இடங்களில் ஏற்றபடி அமைக்க.

**நல்ல, தீய**

——மனிதர்களை எல்லோரும் விரும்புவர்.
——மனிதர்களை எல்லோரும் வெறுப்பர்.

**கொடிய, சாதுவான**

புலி——விலங்கு.
பசு—— விலங்கு.

**வேகமாய், மெதுவாய்**

முயல் —— ஓடும்.
ஆமை —— நகரும்.

**பருத்த, இளைத்த**

——உடல் பாரமாய் இருக்கும்.
——உடல் இலேசாய் இருக்கும்.

பின்வரும் சொற்களுக்கு எதிரிடைச் சொற்களைக் கூறுக.

| | | |
|---|---|---|
| **பணக்காரன்** | **நீளம்** | **மேடு** |
| **உயரம்** | **வலிய** | **ஏற்றம்** |

## 29. ஓநாயும் ஆட்டுக்குட்டியும்



### நடித்துக் காட்டுங்கள்

(ஒரு பிள்ளை ஓநாய். மற்றொரு பிள்ளை ஆட்டுக்குட்டி.)

**ஓநாய்:** யாரடா நீ? நான் குடிக்கும் நீரைக் கலக்குகிறாய்? உனக்கு அவ்வளவு தைரியமா?

**ஆட்டுக்குட்டி:** ஐயா! நான் குடிக்கும் நீர் உம்மிடமிருந்து தானே வருகிறது? நான் இருக்கும் இடம் பள்ளம். நீங்கள் இருக்கும் இடம் மேடு அல்லவா? நான் எப்படிக் கலக்க முடியும்?

**ஓநாய் :** சரி. நீ ஆறு மாதமாய் என்னைத் திட்டி வருகிருயாமே ? ஏன் ?

**ஆட்டுக்குட்டி :** ஐயோ ! இல்லவே இல்லை. நான் பிறந்துகூட ஆறு மாதம் ஆக வில்லையே. யாரோ உங்களிடம் போய் சொல்லி இருக்கிருர்கள்.

**ஓநாய் :** என்னடா. அதிகமாய் பேசுகிருய் ? நீ இல்லாவிட்டால் உன் அப்பாவாவது வைது இருப்பார்.

**ஆட்டுக்குட்டி :** ஐயையோ. இது என்ன அநியாயம் ?

(ஓநாய் ஆட்டுக்குட்டியின் மேல் பாய்கிறது.)

**மற்ருெரு யாரடா கலக்கு தைரியம்**

**பள்ளம் மேடு திட்டி பிறந்து**

**அநியாயம்**

**சரியான** வாக்கியங்களை (**சரி**) என்று குறி.
**தவருன** வாக்கியங்களை (×) என்று குறி :—

1. எலி பூனையைக் கொல்லும். ( )
2. பூனை எலியைக் கொல்லும். ( )
3. எலிக்குப் பகை பூனை. ( )
4. ஆட்டுக் குட்டியை ஓநாய் கொல்லும். ( )
5. மேட்டிலிருந்து பள்ளத்துக்கு நீர் பாயும். ( )

# 30. பாடகனும் நரியும்



## மௌனப் படிப்பு

ஒரூரில் ஒரு பாடகன் இருந்தான். அவன் தன் பிடிலைக் கையில் வைத்துக்கொண்டு மிகவும் இனிமையாய்ப் பாடுவான்.

ஒரு நாள் அவன் பிடிலை எடுத்துக் கொண்டு ஊருக்கு வெளியே சென்றான். அங்கே ஓர் ஆறு ஓடிக் கொண்டு இருந்தது. காற்று ஜில்லென்று வீசிக்கொண்டிருந்தது.

பாடகன் ஆற்றங்கரை ஓரமாய் நின்று கொண்டு தன் பிடிலை வாசிக்கத் தொடங்கினான்.

வானத்தில் பறந்து கொண்டிருந்த பறவைகள் எல்லாம் அப்பாட்டைக் கேட்க அங்கே வந்தன. ஆற்றில் இருந்த மீன்களெல்லாம் தண்ணீரின்மேல் வந்து பாட்டை இன்பமாகக் கேட்டன.

அங்கே ஒரு புதர் இருந்தது. அதனுள் ஒரு நரி ஒளிந்துகொண்டு இருந்தது. அது மெதுவாகப் பாடகனுக்கு அருகில் வந்து பறவைகளையும் மீன்களையும் பிடித்துத் தின்னலாம் என்று எண்ணிற்று.

நரி பாடகனை நோக்கி, "ஐயா, இதோ என் வீடு இருக்கிறது. இங்கே வந்து தினந்தோறும் எனக்கு பாட்டுச் சொல்லிக் கொடும். உமக்கு வேண்டிய பொருள் தருவேன்" என்றது.

நரி கெட்ட எண்ணமுள்ளது என்பதைப் பாடகன் அறிந்துகொண்டான். அவன் நரியை அழைத்துக் கொண்டு தூரத்திலிருந்த ஓர் ஆலமரத்தருகில் போனுன். அந்த மரத்தில் ஒரு பெரிய பொந்து இருந்தது. அவன் நரியை நோக்கி, "உன் முன்னங் கால்களை இந்தப் பொந்துக்குள் வை. அப்படிச் செய்தால்தான் பாட்டு வரும்" என்ருன்.

நரி அப்படியே செய்தது. பாடகன் நரியின் பின்னங்கால்களைத் தூக்கி அந்தப் பொந்துக்குள் தள்ளி விட்டான். பிறகு அவன் அருகில் இருந்த ஒரு பெரிய பாருங் கல்லை எடுத்து அந்தப் பொந்தின் வாயை மூடி விட்டான்.

அவன் நரியைப் பார்த்து, "தந்திரமுள்ள நரியே! இந்தப் பொந்துக்குள்ளேயே ஆடிப் பாடிக் கொண்டிரு. நான் போய் வருகிறேன்" என்று சொல்லித் தன் வீட்டுக்குப் போனுன்.

| | | |
|---|---|---|
| **பாட்டு** | **இனிமை** | **தினத்தோறும்** |
| **பாடகன்** | **இன்பம்** | **முன்னங்கால்** |
| **பிடில்** | **புதர்** | **பின்னங்கால்** |
| **பொந்து** | **தந்திரம்** | **பாறுங்கல்** |

**கேள்விகள்**

1. பாடகன் எங்கே போய்ப் பாடினுன் ?
2. இவன் பாட்டைக் கேட்க எவை வந்தன ?
3. நரியின் எண்ணம் என்ன ?
4. நரியைப் பாடகன் எப்படி ஒழித்தான் ?
5. பாட்டுக் கருவிகள் சிலவற்றின் பெயர்களைக் கூறுக.

**பின் வரும் சொற்களைத் தகுந்தபடி கோடிட்ட இடங்களில் எழுதுக.**

| | |
|---|---|
| **வானத்தில்** | **பொந்துக்குள்** |
| **புதரில்** | **தண்ணீரில்** |

பாம்பு——வாழும்.

நரி——வசிக்கும்.

மீன்——நீந்தும்.

பறவைகள்——பறக்கும்.

# 31. நம் உடம்பு

உன் உடம்பைப் பார். அதில் மூன்று பெரிய பகுதிகள் இருக்கின்றன. அவை யாவை ?

தலையில் என்ன என்ன இருக்கின்றன ? கண்கள், காதுகள், மூக்கு, வாய் முதலியன தலையில் உள்ளவை.

மண்டை ஓடு கெட்டியாய் இருக்கிறது. அதன் மேலே மயிர் மூடியிருக்கிறது. ஏன் தெரியுமா ? மண்டைக்குள் மூளை இருக்கிறது. மூளையே நம் அறிவின் பிறப்பிடம். அது மிக மென்மையானது. அதை மூடிக் கொண்டுதான் மண்டையோடு இருக்கிறது.

நாம் கண்களால் காண்கிறோம். காதுகளால் கேட்கிறோம். மூக்கால் முகர்கிறோம். வாயால் உண்கிறோம்.

வாய்க்குள் பல், நா முதலியன இருக்கின் றன. வாயை உதடுகள் மூடிக்கொண்டு இருக்கின்றன. நாம் வாயால் பேசுகிறோம்.

நடுப் பாகத்தில் மார்புக்கூடும், வயிறும் இருக்கின்றன. மார்புக் கூட்டுக்குள் இரத் தப் பை இருக்கிறது. வயிற்றினுள் சோற் றுப் பை இருக்கிறது. இவற்றைக் காக்கச் சுவர் எழுப்பினதுபோல மார்பும், முதுகும் இருக்கின்றன. தோள்களிலிருந்து கைகள் தொங்குகின்றன.

மூன்றாவது பாகமாக உள்ளவை கால் கள். நம் உடலின் உறுப்புக்கள் ஒவ்வொன் றும் நமக்கு மிகவும் வேண்டியவை. அவை நல்ல நிலைமையில் இருக்கவேண்டும். நாம் நல்ல உணவையே உண்ணவேண்டும். நாம் நம் உடம்பைச் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். நாம் அதை நன்கு பாதுகாக்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| உடம்பு | முதலியன | மார்புக்கூடு |
| உறுப்பு | உடல் | மண்டை |
| சோற்றுப்பை | நிலைமை | பகுதி |
| மூளை | இரத்தப்பை | பாதுகார் |

### கேள்விகள்

1. தலைப்பகுதியில் என்ன என்ன உறுப்புக்கள் இருக்கின்றன ?
2. மூளை எங்கே இருக்கிறது ?
3. நாம் எவற்றால் பார்க்கிறோம் ?
4. நாம் எவற்றால் கேட்கிறோம் ?
5. நாம் பேசுவதற்கு எவை உபயோகப்படுகின்றன ?
6. இரத்தப்பை எங்கே இருக்கிறது ?
7. சோற்றுப்பை எங்கே இருக்கிறது ?

### பயிற்சி

**1. பின்வரும் சொற்களை உரியபடி கோடிட்ட இடங்களில் அமைக்க.**

**கைகளால் கால்களால் நாவால் வாயால்**

நாம்——உருசி பார்க்கிறோம்.

நாம்——எடுக்கிறோம்.

நாம்——பேசுகிறோம்.

நாம்——நடக்கிறோம்.

**2. உடலிலுள்ள உறுப்புக்களின் பெயர்களை எழுதுக.**

# உலகநீதி

1. ஓதாமல் ஒரு நாளும்
இருக்க வேண்டாம்.

2. ஒருவரையும் பொல்லாங்கு
சொல்ல வேண்டாம்.

3. மாதாவை ஒருநாளும்
மறக்க வேண்டாம்.

4. வஞ்சனைகள் செய்வாரோடு
இணங்க வேண்டாம்.

5. போகாத இடந்தனிலே
போக வேண்டாம்.

6. போகவிட்டுப் புறஞ்சொல்லித்
திரிய வேண்டாம்.

7. நெஞ்சாரப் பொய்தன்னைச்
சொல்ல வேண்டாம்.

8. நஞ்சுடனே ஒரு நாளும்
பழக வேண்டாம்.

9. அஞ்சாமல் தனி வழியே
போக வேண்டாம்.

10. அடுத்தவரை ஒருநாளும்
கெடுக்க வேண்டாம்.

11. மனம்போன போக்கெல்லாம்
போக வேண்டாம்.

12. தனந்தேடி உண்ணுமல்
புதைக்க வேண்டாம்.

13. தருமத்தை ஒருநாளும்
மறக்க வேண்டாம்.

14. கொலைகளவு செய்வாரோடு
இணங்க வேண்டாம்.

15. கற்றவரை ஒருநாளும்
பழிக்க வேண்டாம்.

16. கோயிலில்லா ஊரில்
குடியிருக்க வேண்டாம்.

17. மதியாதார் தலைவாசல்
மிதிக்க வேண்டாம்.

18. மூத்தோர் சொல் வார்த்தைகளை
மறக்க வேண்டாம்.

19. முன்கோபக் காரரோடு
இணங்க வேண்டாம்.

20. வாத்தியார் கூலியை
வைத்திருக்க வேண்டாம்.

21. வழிபறித்துத் திரிவாரோடு
இணங்க வேண்டாம்.

22. சேராத இடந்தனிலே
சேர வேண்டாம்.

23. செய்த நன்றி ஒரு நாளும்
மறக்க வேண்டாம்.

24. தெய்வத்தை ஒருநாளும்
மறக்க வேண்டாம்.

25. இறந்தாலும் பொய்தன்னைச்
சொல்ல வேண்டாம்.

—:○○:—

TB 031 (2) N56
86868

1C
RTR/8669